Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 13 28 - 07 - 1992 செவ்வாய்க்கிழமை ஓசை 161

## பரீட்சை வினாத்தாள்களுடன் பணிப்பாளர் இன்று வருகை

(நமது நிருபர்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து விமானமூலம் இன்று எடுத்துவரப்படவுள்ளன. இவ் வினாத்தாள்களுடன் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும் பலாலி வருகிறார். விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்படும் வினாத்தாள்கள் காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறைக்கு கப்பல்மூலம் எடுத்து வரப்பட உள்ளன. பருத்தித்துறையில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பொறுப்பேற்று யாழ்ப்பாணம் கொண்டுவருவர்.

# முன்னாள் பொலிஸ் அதிபர் உடுகம்பொல நாட்டைவிட்டு தப்பியோட்டம்

## துப்பாக்கிச் சூடு

(குருநகர்)

நேற்று மாலை 4.45 மணி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று உரையாற்றுவார்

(நமது நிருபர்)

உட்சலா பல்கலைக்கழக சமய வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் பீற்றர் சாக் ''தமிழ்ப் பௌத்தம்'' எனும் தலைப்பில் இன்று மாலைஇரண்டுமணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் உரையாற்றவுள்ளார்.

## அமெரிக்கா சென்றதாக ஊகம்

(லண்டன்)

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம் பொல இலங்கையை விட்டு தப்பிஓடி விட்டதாக பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது. அவர் எங்கு சென்றார் என திட்டவட்டமாகத் தெரியா விடினும் அமெரிக்காவிற்கோ, அன்றிகனடாவிற்கோ சென்றிருக்கலாம் எனவும் ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசிற்கெதிராக மக்கள் மத்தியில் வெறுப்பைத் தூண்டியது உட்பட நான்கு குற்றச்சாட்டுக்கள் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மீது அரசாங்கம் சுமத்தியிருந்தது. அத்தோடு பிடியாணை ஒன்றையும் அரசு விடுத்துள்ளது. இது தொடர்பாக மூன்று மாதங்களாக திரு. உடுகம்பொலவை சிறிலங்கா பொலிசார் தேடி வந்தனர்.

இதேவேளை கடந்த பத்தொன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரகசியமான இடம் ஒன்றில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில்

[4 ஆம் பக்கம் பார்க்க[

## மகாநாயக்கர்களை விட தொண்டா சக்தி வாய்ந்தவர்

### பௌத்த காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டின் மகாநாயக்க தேரர்களை விட அமைச்சர் தொண்டமான் மிகவும் சக்தி வாய்ந்தவர் என்று அகில இலங்கை பௌத்த காங்கிரசின் தலைவர் பேராசிரியர் எம்.பி. ஆரியபால தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பௌத்த காங்கிரசின் எழுபதாவது ஆண்டுக்கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## இலங்கையர்கள் உட்பட 9 பேருக்கு எதிராக கோயம்புத்தூரில் வழக்கு

(சென்னை)

இலங்கையர்கள் உட்பட ஒன்பது பேருக்கு எதிராக சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களையும், நாட்டு வெடிகுண்டுகளையும் உற்பத்தி செய்ததாக கோயம்புத்தூர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் விசேட நீதிமன்றத்தின் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருக்கோணமலை மீன் சந்தையடியில் சிங்களவரின் 40 குடிசைகள் தீயில் எரிந்து சாம்பராகின

(திருக்கோணமலை)

திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலயவீதியில் குடியேற்றப்பட்ட சிங்களவர் வசித்துவந்த 40 ஓலைக் குடிசைகள் தீக்கிரையாகியுள்ளன. மீன் சந்தைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த இக் குடிசைகள் நேற்று முன் தினம் காலை 11.30 மணியளவில் தீட பிடித்துக்கொண்டன.

இப்பகுதியில் அண்மைக் காலத்திலேயே இச்சிங்கள மீனவர்கள் குடியேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மண்ணெய் கட்டுப்பாட்டு விலை 30 ரூபாவாக நிர்ணயம்

### தேங்காயெண்ணெய் 65 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மண்ணெண்ணெயில் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு லீற்றர் முப்பது ரூபாவாகவும், தேங்காயெண்ணெயின் ஆகக்கூடிய சில்லறை விலை ஒரு லீற்றர் அறுபத்தைந்து ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் யாழ். குடாநாட்டிலுள்ள வர்த்தகர்கள் குறித்தவிலைக்கு பொருள்களை விற்பனை செய்யுமாறு தமிழீழக் காவல்துறையினரின் அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகவரலாற்றில் கறைபடிந்த ஜூலை 83 படுகொலைகள்

### - நினைவுக்கூட்டத்தில் வே. பாலகுமார்

## ஜனசக்திஉதவிவழங்குவதில் தமிழர் புறக்கணிப்பு

கொத்மலை பிரதேசத்தோட்டங்களில் ஜனசக்திஉதவி வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. இத் தோட்டங்களில் தமிழ், சிங்கள தொழிலாளர்கள் உள்ள போதும் சிங்களவர்களுக்குமட்டுமே உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## லெப். கேணல் சராவிற்கு கைதடியில் நினைவஞ்சலி

லெப். கேணல் சரா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் கைதடி லெப். கேணல் சரா வீடமைப்புத் திட்டத்தில் திருக்கோணமலை இடம்பெயர்ந்த மக்களால் நேற்று நடாத்தப்பட்டது.

இந்நினைவஞ்சலிக் கூட்டம் வீடமைப்பு திட்ட தலைவர் சு. இராசலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்ச்சி ஆரம்பத்தில் சமூகப்பொருளாதார மேம்பாட்டுத்திட்ட திருக்கோணமலை மாவட்டப் பிரிவுப் பொறுப்பாளர் திரு பிரிதுகாந் அவர்கள் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் சார்பில் செல்வன் கு. சபேசன், இ கணே ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றிவைத்தனர். வீடமைப்புத் திட்டத்தின் இடம் பெயர்ந்தோர் சங்கப் பொருளாளர் லெப். கேணல் சராவின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தார். இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமாகியது.

இக்கூட்டத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்ட திருமலை மாவட்டப் பிரிவுப் பொறுப்பாளர் பிரிதுகாந் சமூகபொருளாதார மேம்பாட்டுத் திட்ட திருமலை மாவட்ட பிரிவுசார்பில் கு. சபேசன் இ. கணே, திருமலைஇடம் பெயர்ந்த மக்கள் சார்பில் இ. பத்மசேகர் ஆகியோர் உரையாற்றினர் க. சிவகுமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

## விஞ்ஞானக் கண்காட்சி இன்று இறுதி நாள்

யாழ் பல்கலைக்கழகம், யாழ். விஞ்ஞானச் சங்கமும் இணைந்து நடாத்தும் விஞ்ஞானக் கண்காட்சியின் இறுதி நாளான இன்று மாணவர்களுடன் பொதுமக்களும் அனுமதிக்கப்படுவார்கள் என

அ... மக்கப்பட்டிருந்த இக் குடி கது.

கல்கத்தாவிலிருந்து வந்த

## நான்கு இல. தமிழர்கள் சென்னையில் கைது

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து நான்கு இலங்கைத் தமிழர்கள் விமான நிலைய பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஒரு பெண் உட்பட இந்த நால்வரும் சர்கத்தாவிலிருந்து விமானம் மூலம் மீனம்பாக்கம் வந்தனர் என்றும், கல்கத்தா அதிகாரிகள் அளித்த தகவலின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அம்ஸ்ரடாம் நகரத்திலிருந்து டாக்கா வழியாக இவர்கள் கல்கத்தாவிற்கு வந்தனர் என தெரிவிக்கப்படுகிறது இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்குமுன் இந்திய குடியேற்ற அதிகாரிகளும் காவல்துறையினரும் கடுமையாக விசாரணை செய்ததாக தெரிவிக்கப்படுகிறது

## புனர் நிர்மாணத்திற்கு மேலதிக நிதி தேவை

(கொழும்பு)

வடக்குக் - கிழக்கு மாகாணங்களின் அவசரபுனரமைப்பு புனர் நிர்மாண வேலைகளுக்கு மேலதிகமாக 29கோடி 34 இலட்சப் ரூபாய் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தத் தொகையில் 14 கோடி 34 இலட்சம் ரூபா இலங்கை வங்கியிடம் பெறப்பட்ட கடன் திருப்பி வழங்கப்படும் என்றும்,

வடக்குக்-கிழக்கு புனர் வாழ்வுக்கு தேவைப்பட்ட நிதியின் மேற்படி தொகை இலங்கை வங்கியிடம் இருந்து பெறப்பட்டது என்றும் கூறப்படுறது.

## பாதுகாப்புச் செலவினம் 2000கோடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செலவு இரண்டாயிரம் கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

எமது பாதுகாப்பு செலவினம் மிகப் பெரும் அளவில் அதிகரித்துள்ளது. 1988 இல் பாதுகாப்புச் செலவினம் 800 கோடி ரூபாவாக இருந்தது என்றும்,

இன்று இந்தச் செலவினம் இரண்டாயிரம் கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது என்றும்,

வடக்குக் கிழக்கின் அவசியமற்ற, தேவையற்ற பிரச்சினையின் விளைவாகவே இந்த அதிகரிப்புஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## - நினைவுக்கூட்டத்தில் வே. பாலகுமார்

(நமது நிருபர்)

உலக வரலாற்றில் கறைபடிந்த இந்த ஜூலை 83 இதயங்களில் ஓர் வடுவாக பதிந்து விட்டது. இது ஒவ்வொரு தமிழர்களின் இதயங்களிலும் வடுவாக இருக்கும்வரை இக் கொடூர நிகழ்வுகளைதன்மானமுள்ள தமிழன் எவரும் மறக்கமாட்டான்.

இவ்வாறு1983 ஜூலை இல் சிறிலங்கா வெலிக்கடைசிறைச்சாலையில் வைத்து படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ்ப் போராளிகள் உட்பட பொதுமக்களின் நினைவாக நடைபெற்ற நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே. பாலகுமார் தெரிவித்தார்.

நேற்று மாலை ஆவரங்கால் சிவன் கோவில் முன்றலில் வலிகாமம் கோட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு+குமரன் தலைமையில் நடைபெற்ற இந் நினைவுக் கூட்டத்தில் ஐயாயிரத்திற்கு மேற்

]4 ஆம் பக்கம் பார்க்க]

# செஞ்சிலுவை கப்பல் மூலம் கொழும்பு வந்த புலிகள்

## யாழ். எம். பியின் புரளிக் கதை

[கொழும்பு]

கொழும்பில் நிபுணத்துவ வைத்திய வசதிகளைப் பெறுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து அழைத்து வரப்பட்டோருள் புலிகளும் இருக்கின்றார்கள் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் கே. நவரத்தினம் தெரிவித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, தாதிமார் என்ற போர்வையில் புலிகள் கொழும்பு வந்துள்ளதாகவும், அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்மத்தியஸ்தத்தில் புலிகளுடன் இரகசியப் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகின்றது இதற்கு வாய்ப்பாக தற்போது வடசுில் தாக்குதல் நடவடிக்கைகளும் அரசால் நிறுத்திக் கொள்ளப்பட்டு விட்டன எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

கடந்த வெள்ளிக் கிழமை 90 நோயாளர்களை சர்வதேச

[4 ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளுக்காக என்றும் செயற்படுபவர் கவிஞர் காசி ஆனந்தன்

## -இளங்குமரன்

(நமது நிருபர்)

தமிழீழவிடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப்புலிகளே உண்மையும் நேர்மையுமுடையவர்கள் என்பதை அறிந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக அன்றிலிருந்து இன்று வரை செயற்பட்டுவருபவர் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள்.

இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் தமிழன் கனவு நூல் அறிமுகவிழாவில் அறிமுக உரை வழங்கிய விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியலமைப்புச்சட்டங்களை கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் கடுமையாக எதிர்த்தவர் அது தமிழர்களை வாழ்விக்க வந்த சட்டமல்ல தமிழர்களை அடிமையாக்கவந்த அடிமைச் சட்டம் எனக்கூறி மொழிபெயர்ப்புத் திணைக்களத்தில் இருந்து பதவியைத் தூக்கி எறிந்தவர். இதனால் அவர் பதவி விலகிய ஒருமாத காலத்தில் சிங்கள அரசினால் கைது செய்யப்பட்டுஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

[ 4ஆம் பக்கம் பார்க்க]

...இணைந்து நடாத்தும் விஞ்ஞானக் கண்காட்சியின் இறுதி நாள் இன்றாகும். இறுதி ... மதிக்கப்படுவார்கள் என யாழ். விஞ்ஞானச் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதி

## மானியக் குழு தவறான வழியில் செல்லவில்லை

(கொழும்பு)

''பல்கலைக்கழக அனுமதி விவகாரத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளிலிருந்து எந்த விதத்திலும் விலகிச் செல்லவில்லை நீதிமன்றத்தினால் வகுக்கப்பட்ட வழிகாட்டல்களை மானியங்கள் ஆணைக் குழு உறுதியாக பின்பற்றுகிறது.''

இவ்வாறு நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## கப்பலில் செல்வோர் பதிவு செய்து கொள்ளவும்

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து கொழும்பிற்கு அதிவிசேட சிகிச்சைக்கு கப்பல்மூலம் செல்லும் நோயாளர்கள்எதிர்வரும் 2-ம், 3-ம் திகதிகளில் தங்கள் பெயர்களை யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## திணைக்கள அதிகாரிகள் முன் அனுமதி பெறுவதில்லை

(யாழ்ப்பாணம்)

திணைக்களத் தலைவர்கள், பதவிநிலை உத்தியோகத்தர்கள் கடமையாற்றும் உத்தியோக இடங்களிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் போது விடுமுறை அனுமதிக்கும் உத்தியோகத்தரிடமிருந்து முன் அனுமதி பெறாமல் செல்வதாக தெரியவந்துள்ளது என வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

முன் அனுமதி பெறாது உத்தியோக இடங்களிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லுதல் ஒழுங்காற்று நடவடிக்கைக்குரிய செயலாகும். ஆகவே கடமையின் நிமித்தம் அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக விடுமுறையில் செல்ல இருந்தால் அனுமதிக்கும் உத்தியோகத்தரிடமிருந்து முன் அனுமதியைப் பெறும்படியும் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

**சொட்டு நீரும் எங்கள் சொத்தே**

## வரி விளம்பரம்

கிணற்றுப்பங்குடன் 8 பரப் புத் தோட்டக்காணி அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் உண்டு. தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர் அல்வாய் தெற்குஅல்வாய் [4773]

### தவறிவிட்டது

24-07-92 நாகராசா ஜெயகாந்தன் என்பவருடையஅடையாள அட்டை யாழ் - கிளாலி வீதியில் பிரயாணம் செய்யும் பொழுது தவறிவிட்டது. இல. 6 5 1 981 9 13vகண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். ஜெயாபென்சி ஹவுஸ் இல 160 நவீனசந்தை யாழ்ப்பாணம். [2896]

### உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்

நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும் உதிரிப் பாகங்களுக்கான மணிக்கூடுகளும் றேடியோக்களும் வாங்கப்படும் மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும் டில்கா வாச் வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (2879)

### 10வயதுச் சிறுமி சாதனை

(தென்மராட்சி)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த 18,19ஆம் திகதிகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பத்துவயதுச் சிறுமியொருவர் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கரம்பைக்குறிச்சி வரணி செல்வா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செல்வி இ. வரதாமதி (வயது பத்து) என்பவரே இவ்வாறுசாதனைநிலைநாட்டி பாராட்டுகளைப்பெற்றவராவர் அதிதூர ஓட்டங்களான பத்தாயிரம் மீற்றர் ஓட்டம் மூவாயிரம் மீற்றர் ஓட்டம் ஆகிய விளையாட்டுகளில் முதன்மை ஸ்தானங்களைப் பெற்ற இவருக்குமேற்படி விளையாட்டுப் போட்டியில் கௌரவவிருதும், பொற்கிழியும் வழங்கப்பட்டன. (35)

## அறிவித்தல்

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகம் நடாத்த இருக்கும் 07 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் 10-08-92க்கு முன் தங்கள் கழக விண்ணப்பத்தைப் பதிவு செய்து கொள்ளவும்.

முக்கிய குறிப்பு: பருத்தித்துறை யாழ்ப்பாணம் லீக்கில் இணைந்த கழகங்கள் மாத்திரம் பங்குபற்றலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

''சங்கரன்''
யாழ் வீதி, நெல்லியடி.

(2905)

### யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

ஸ்தாபகர் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களின் நினைவாலயத் திறப்பு விழாவும் உருவப்பட திரை நீக்கமும்

**இடம்:** அத்தியார் இந்துக் கல்லூரி

**காலம்:** யூலை 29 புதன்கிழமை காலை 9.00 மணி

பிரதம விருந்தினர் திரு க. அருணாசலம் ஓய்வு பெற்ற அதிபர், சிறப்பு விருந்தினர் திரு. இ. சிவானந்தன்- பிரதிக் கல்விப் பணிப்பாளர் மருதனாமடக் கோட்டம்

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ. கனகசுந்தரம்
அதிபர்

Dr. க.வேலாயுதபிள்ளை
தலைவர்

சு. சண்முகவடிவேல்
செயலாளர்.

[சி/4779]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு : 10-5-1934



உதிர்வு : 28-6-1992

### முருகேசு இராசதுரை

முருகேசர் பெற்றெடுத்த இனிய மகன்
பெரும் புகழைப் பெற்ற இராசதுரை
இப்புவியை விட்டேகி அரனடியைசேர்ந்தார்
அப்பாவின் ஆன்மா அமைதியை
அடையட்டும்!

கல்கத் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(2901)

இவரின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

## படம் வரைஞர்கள் தேவை

1. கட்டிட, குடிசார் (சிவில்) படம் வரைஞர்கள்.
2. எந்திரவியல் படம் வரைஞர்கள்

தேவைப்படுகின்றனர், தகுதியானவர்கள் 31· 07· 1992 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்-163,
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி4782)

## 31 ம்நாள் நினைவஞ்சலி



### கப்டன் வீரமணி

(கணபதிப்பிள்ளை சந்திரசேகரம்)
(திருமலை)

தாயின்மடியில்: 05· 04· 1970
தாயகமண்ணில்: 28· 06· 1992

பள்ளி வயதினிலே புள்ளி மானாக
துள்ளித் திரியும் வேளை,
உன் மனதினிலே ஓர் வெற்றிடத்தில்;
தமிழீழம காண்போம் என்று நின்றாய் நீ!
கட்டைக் காட்டில் எதிரியுடன் உன் தோழர்கள்
போர் புரியும் வேளை;
நீயும் உன் பயணத்தை தொடர்ந்தாயே!
களத்தில் சென்று வெற்றியுடன் மீண்டும் வந்து;
வீரமணி என்று வீரநடை போடுவாய் என்றிருக்க
எதிரியின் குண்டுக்கிரையாகி விட்டாயே!
என்று கேட்டேன் ஒரு செய்தி;
மதி கெட்டு நின்றேன்;
தேம்பியழுதல் அன்றி வேறொன்றும் நானறியேன்.
தேற்றினேன் மனதினை;
தலைவரின் பாதை தனை உணர்ந்து;
தேச விடுதலைக்காய் புறப்பட்ட உனை
வாழ்த்தினேன் வாயார!

காவல் பணிமனை முன்பாக,
சுன்னாகம்.

இரத்தினம், சறோ
(சி4776)

## கூட்டம்

சேவைக் காலத்தில் பட்டம் பெற்று நியமனம் பெறாதபட்டதாரிகள்சங்க அங்குராப்பண கூட்டம் நாளை (29-07-92) புதன்கிழமை பி.பகல் 3-00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

சேவைக் காலத்தில் பட்டம் பெற்றும் நியமனம் பெறாத நிலையிலிருந்து கொண்டு சேவையாற்றும் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திலுள்ள ஆசிரியர் அனைவரும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கு உதவுமாறும் தங்கள் விபரங்களைத் தந்துதவுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## விசேட கூட்டம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான விசேட கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். சகல ஊழியர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது அன்றைய வரவு அவ்வாரத்துக்குரிய ஒருநாள் வரவாக கணிக்கப்படும். தொழிற்சாலை சம்பந்தமான பல விடயங்கள் இக்கூட்டத்தில் கவனத்துக்கு எடுக்கப்படும். என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 07 - 28

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலை தோப்பூர்ப்பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

★ **சுந்தர்** (தட்சணாமூர்த்தி - கந்தளாய், திருக்கோணமலை)

1989ஆம் ஆண்டு மன்னாகண்டலில், இந்தியப்படையினருடனான மோதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**ஜெகன்** (பத்மநாதன் சந்திரகுமார் - ஜெயந்திநகர், கிளிநொச்சி)

யாழ்-கொட்டடிப்பகுதியில், இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990ஆம் ஆண்டு திருகோணமலை - கடவாணைப் பகுதியில் எதிர்பாரதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப்பிரிந்த -

**பில்லா** (உருத்திரமூர்த்தி - திருக்கோணமலை)

திருக்கோணமலை - கட்டைபறிச்சான் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பாபு** (ஆ. மோகனசுந்தரம் - பதுளை)

1991ஆம் ஆண்டு ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தடைமுகாம் மீது இரண்டாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் சசி** (மாணிக்கராசா சிவகுமார் - கண்டி வீதி, விளாங்குளம், திருக்கோணமலை)

**லெப்.அஜந்தன்** (வேலு ஆனந்தன் - பாண்டியன் குளம், துணுக்காய், மாங்குளம், முல்லைத்தீவு)

**லெப்.முரளி** (எட்வின் சிறி-மருதங்குளம், மாங்கேணி, மட்டக்களப்பு)

**லெப்.றோமன்** (குணேந்திரராஜா ஜெயச்சந்திரன் - கரைச்சித்திடல், தம்பலகமம், திருகோணமலை)

**சிவதாஸ்** [யுவாழிசதம்பியாஸ் - 63, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்]

**2-ம் லெப். துரை** [சிங்கராஜா மனோகர் - கள்ளிமேடு, தம்பலகமம், திருக்கோணமலை]

**2-ம் லெப். சிகானு** [கதிரவேல் கருணேஸ்வரன் - முழங்காவில், பூனகரி, மன்னார்]

**2 ம் லெப். தாஸ்** [செல்லப்பா குகேந்திரன் - 141 உருத்திரபுரம், கிளிநொச்சி]

**மணாளன் / மாலானன்** (பியதாச விஜயபால் - பாரதிபுரம், மூதூர், திருக்கோணமலை)

**ஆதவன்** [சிவலிங்கம் சிவானந்தன் - பூனகரி, மூதூர்,

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 31-ம்நாள் நினைவஞ்சலியும்

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பாவனையில் இருந்த கிழ்வரும் பொருள்கள் நாளை 92 - 07 - 29 ஆம் திகதி காலை 10. 00 மணி முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக திருநெல்வேலி வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுவோர் பொருள்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக் கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருள்கள் அனைத்தையும் 92 - 07 - 29 ஆம் திகதி மாலை 4. 00 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப் படுத்தல் வேண்டும்.

ஏலத்தில் விற்கப்படும் பொருள்களைப் பார்வையிட விரும்புவோர் 92 - 07 - 28 ஆம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதியாளரோடு தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

## ஏலத்தில் விற்கப்பட இருக்கும் பொருள்கள்

1. கூட்டல் இயந்திரம் -02
2. கதிரைகள் - அலுவலகம் -03
   சாப்பாட்டு -07
   உருக்கு -01
3. கரட் உரஞ்சும் தட்டு 01
4. கேத்தல்-அலுமீனியம்சாதாரணம்-05
   மின்சாரம்-03
5. வாளி -05
6. தொற்று நீக்கி -01
7. செற்றி கதிரை -இருவர் இருப்பது -01
   ஒருவர் இருப்பது -02
8. பாத்திரங்கள் - பேசின் -09
   பட்டர் டிஸ் -02
   செம்பு எ சி -01
   பீங்கான் -06
   ரம்ளர் -05
   இட்லி சட்டி -01
   தோசை கரண்டி -01
   இடியப்ப உரல் -01
   தண்ணீர்ப் பாத்திரம் -01
   தேநீர்க் கோப்பை -09
   தேனீர் பீரிஸ் -01
9. ஆட்டுக்கல் -01
10. மின்சார அடுப்பு -02
11. பழைய புதினப் பத்திரிகைகள்
12. கிளிப் அடிக்கும் இயந்திரம் -04
13. சிகரட் சாம்பல் தட்டு -01
14. துவிச்சக்கரவண்டி -01
15. ஒட்டை போடும் இயந்திரம் -12
16. அலுவலக கோவைத்தட்டு -01
17. தட்டச்சு இயந்திரம் -01
18. அருவாள் -01
19. ஆமைப்பூட்டு -03
20. சதுரங்க போட்டும் காய்களும் -01
21. பற்மின்ரன் றக்கற் -08
22. பற்மின்ரன் செற் -02
23. மேசைப்பந்து றக்கற் -05
24. கால்பந்து -01
25. ரியூப் லையிற் செற் -01
26. மணிக்கூடு (மேசை) -01
    (சுவர்) -02
27. கடம் -01
28. வயலின் பெட்டி -01
29. மண்வெட்டி -01
30. ஆய்வுகூட உபகரணம் -03
31. மேசை மின்விசிறி -02
32. மேசைக்கண்ணாடி -01
33. தண்ணீர் விடும் குழாய் -50 அடி
34 மேசை -02
35. போட்டோ பிரதி இயந்திரம் -02
36. கைகழுவும் பேசின் -01
37. மரப்பெட்டிகள் -
38. மரச்சிலாகையால் ஆனபெட்டிகள்
39. மரப்பெட்டி பலகைகள்
40. உத்தியோகத்தர்களுக்கானபாக்குகள்
41. அடிமட்டம் -03
42. கழிவு ஓயில்

ஏல விற்பனை நடத்தும்உத்தியோகத்தர்களின் முடிவேஇறுதியானது


பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்

(சி-4750)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

★ ★



★ ★

## கப்டன் எல்லாளன் (ஒட்டேக்கா)

( பொன்னுச்சாமி ஹரிதரன் )

தாயின் மடியில் : 01 -11 - 72

தாயக விடிவில் : 28 - 06 - 92

நிதம் தரும் இடர் எனவும்-
நீண்டுயர்ந்த நிலை அகற்ற
தவம் இருந்து பெற்ற மைந்தன் அவன்-
(தன்) உயிர் கொடுத்தும் ஒரு விழுதானான்
இதம் தரும் இனிய தமிழ்
ஏற்றம் இட்டே வான் உயர
இளம் - பிறை எல்லாளன் அவன் -
(தன்) உடல் சரித்தே நல்விதையுமானான்.

கரையும் மனதுகள் நினைவும் பெருகையில் -
கல்அறையும் பொடிபட இவன் எழுவான்
கனியும் விடுதலை வரவும் தருகையில் -
காவியம் ஆகியே அணிதருவான்
வரையும் கோடுகள் வடிவம் பெறுகையில் -
வண்ண ஓவியம் எனவும் எழில் இடுவான்
வளரும் வீரமும், வாழ்வும் இணைகையில் -
வணங்கும் தெய்வம் எனவும் வழிபடுவான்.

28 - 07 - 92 அன்று அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற இருப்பதால் உறவினர்கள், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

சிவகுருவாசம்,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை (சி/4777)

துயரால் ஏங்கும்
தந்தை, தாய், அம்மாச்சி,
சகோதரிகள், இவர்களுடன்
உதயசூரியன் கழகத்தினர்

---

**மணாளன் / மாலானன்** (பியதாச விஜயபால் - பாரதிபுரம், மூதூர், திருக்கோணமலை)

**ஆதவன்** [சிவலிங்கம் சிவானந்தன் - பூனகரி, மூதூர், திருக்கோணமலை]

**தமிழ்ச்செல்வன்** [மாசிலாமணி நிரஞ்சன் - திருக்கோணமலை]

**அருள்** (சத்தியபாமா கிருஸ்ணதேவன் - இடிகுண்டடி நவாலி வடக்கு, கட்டுடை மானிப்பாய், யாழ்.)

**நரேஷ்** (ஆரோக்கியநாதன் எட்வேட் குணசூரியன் - சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு, யாழ்.)

**சந்திரன்** (முருகேசு ராஜேஸ்கண்ணன் - 85, ஜி. பி. ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு)

**ஜெயா** (யேசுதாஸ் கொணறியூட் - சிறிநீலாசோலை, உயிலங்குளம், மன்னார்)

**சிசில்** [இராமையா பொன்னம்பலம் இராஜேந்திரன் - பள்ளிக்குடா, முழங்காவில், மன்னார்]

**நெப்போலியன்** [ஞானதாஸ் சுரேஸ் - 25 09, லிங்க நகர், திருக்கோணமலை]

**குணு** (நற்குணம் குணசீலன் - முனையூர். தம்பிலுவில், அம்பாறை)

**சுபராஜ்** (செல்லத்துரை தேவன் - 6-ம் வட்டாரம், வேலணை மேற்கு, தீவகம், யாழ்.)

**அன்புச்செல்வன்** (பூபாலபிள்ளை புஷ்பநாதன் - கல்முனை - 03, அம்பாறை)

**2-ம் லெப். சுபத்திரா** (புவனேஸ்வரி சுந்தர் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, யாழ்.)

**2-ம் லெப். ஜஸ்மின்** (சத்தியமலர் (தயா) சின்னத்தம்பி - அல்லாரை வடக்கு, கொடிகாமம், யாழ்.)

**சூரியகலா** (குமுதினி நடராசா - கரவெட்டி மத்தி, யாழ்.)

**அனுசா** (ஜெசிந்தா குமாரசாமி - வெள்ளைவீதி, களவாவோடை, ஏழாலை தெற்கு, யாழ்.)

**வேல்விழி** (தங்கேஸ்வரி (கமலா) இராசமாணிக்கம் - ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை, யாழ்.)

**காட்மன்** (கோணலிங்கம் சுரேஸ்வரன் - பாரதிபுரம், திருக்கோணலை)

துணைப்படை வீரர் -

**சுரேஷ்** (செல்வராஜா தனபாலசிங்கம் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி, திருக்கோணமலை)

நாட்டுப் பற்றாளரான -

**சுரேஷ்** (குடியிருப்பு, நாவற்குழி, யாழ்.)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட விவசாயியான வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ளமாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4764]

சிந்தனைக்கு

இலட்சியப் பற்றார்வத்தின் புனித வேகத்தை விட உத்தமமானதோ நியாயமானதோ வேறு இருக்க முடியாது.

ஜீன் பட்டீஸ்த் மொலியோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28- 07- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

# சிங்கள ஆயுதப்படைக்குள் அதிகாரப் போட்டி

கடந்த மூன்று மாத காலத்திற்குள் நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளில் பெரிய மாறுதல்கள் எதுவும் ஏற்படவில்லை. சில இடங்களில் மட்டும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள இடங்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன இவ்வாறு கூட்டுப் படைத் தலைமையகப்பேச்சாளரான கேர்ணல் முனசிங்கா அண்மையில் கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது தெரிவித்தார்.

கேர்ணல் முனசிங்காவின் இக்கூற்று உண்மையானது என்பது ஒருபுறம் இருக்க இதனைத் திடீரென கேர்ணல் முனசிங்கா அறிவிப்பதன் காரணம் என்ன என்பதுதான் ஆச்சரியமாகவுள்ளது. இதுவரை இராணுவம் வெற்றி மேல் வெற்றியைக் குவித்துக் கொண்டிருப்பதாக பெரும் பிரசாரப் பீரங்கியாக முழங்கிய கேர்ணல் முனசிங்கா இராணுவம் பெரு வெற்றியை ஈட்டவில்லை. சிறிது முன்னேற்றமே கண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அதாவது கடந்த மூன்று மாத காலத்திற்குள் இராணுவம் ஈட்டிய வெற்றி பிரமிக்கத்தக்கதுமில்லை, பாராட்டப்படத்தக்கதும் ஒன்றுமில்லை என்பதுமே கேர்ணல் முனசிங்காவின் கூற்றாகும்.

ஆனால் கேர்ணல் முனசிங்கா இவ்வாறு கூறியது ஞாபகமறதி காரணமாக உண்மையை வெளியிட்டமையோ அன்றி. மக்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தில் ஏற்பட்டதோ அல்ல. இதுவேண்டுமென்று, திட்டமிட்டுப் பேசிய பேச்சாகும். அதாவது கூட்டுப் படை நடவடிக்கைத் தலைமையகத்திற்கும், இராணுவத் தலைமைப் பீடத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் எதிரொலியாகும்

கூட்டுப்படை நடவ்டிக்கை தலைமையகத்தில் ஆரம்பம் தொட்டே அதன் பேச்சாளராக இருந்து வரும் கேர்ணல் முனசிங்கா தற்பொழுது அதிகாரத்தைப் பெற்றுள்ள இராணுவத் தலைமைப்பீடம் குறித்து வெளியிட்ட கருத்தே இதுவாகும் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து முப்படைத் தளபதிகளிடம் அதிகாரங்கள் மாற்றப்பட்டபோது மூன்று மாத காலத்திற்குள் புலிகளை ஒழித்துக்கட்டி விடுவதாக

# பீப்பாக் குண்டுகளின் பாவனை குறித்து

# அதிகாரி - பத்திரிகையாளர் கருத்து மோதல்

## அதிகாரி சொல்வது பொய் என்கிறார் பத்திரிகையாளர்

சீனத் தயாரிப்பான வை-8 விமானம் ஆனையிறவுப் பகுதியில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது தொடர்பாக கடந்த வியாழனன்று நடந்த வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தரப்படுகின்றன. இது தொடர்பாகச் செய்தியாளரின் கேள்விகளும், கேள்விகளுக்கு விங் கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடியும், கேர்ணல் சரத் முனசிங்காவும் அளித்த விடைகள் வருமாறு:

கே; வை-8 விமான விபத்துத் தொடர்பான விசாரணை முடிவடைந்து விட்டதா?

விங்கொமாண்டர் ஜெயலத் வீரக்கொடி

ப: விசாரணை இன்னும் முடிவடையவில்லை.

கே: சீனன் குடாவில் பெப்ரவரி மாதம் இடம்பெற்ற வெடிவிபத்து விசாரணை என்னவாயிற்று?

ப; அது தற்செயலான சம்பவம் அதற்கான சரியான காரணத்தைநிலைநாட்ட முடியவில்லை.

கே: பீப்பாய்க் குண்டு வெடித்த அதிர்ச்சியைத்தொடர்ந்து மற்றக் குண்டுகள் வெடித்திருக்கலாம் அல்லவா?

ப; அப்படி எதுவும் நடைபெறவில்லை. எம்மால் பீப்பாய்க் குண்டுகள் தயாரிக்கப்படுவதில்லை.

கே; விமானப்படை பீப்பாய்க் குண்டுகள் தயாரிப்பதுமில்லை; பீப்பாய்க் குண்டுகள் போடுவதுமில்லை- இல்லையா?

ப: இல்லை.

கே; பீப்பாய்க்குண்டுப் புகைப் படங்களைஎம்மால் காண்பிக்க முடியும்.

ப- கேர்ணல்முனசிங்கா:படத்திலுள்ள குண்டுகள் புலிகளின் குண்டாக இருக்கலாம்.

ப- செய்தியாளர் இல்லை அது புலிகளின் குண்டல்ல.

கே; சிறிலங்கா விமானப்படையினர் அதனை வேறு பெயரால் சிலிண்டர் குண்டு என்று அழைக்கிறார்கள் போலும்?

ப; ஜெயலத்வீரக்கொடி பீப்பாய்க் குண்டுகள் எம் வசம் இல்லை.

கே; அந்தக் குண்டுகளைச் செய்வதில்லையா?

ப; இல்லை.

கே; அந்தக்குண்டுகளை என்ன பெயரால் அழைக்கிறீர்கள்?

ப; அந்தக் குண்டுகளை நாம் போடுவதில்லை.

கே; பத்து கிலோ கிறாம் பீப்பாய்க்குண்டுகள் தயாரிக்கப்பட்டதாக முன்பு கூறப்பட்டது. இப்போது முந்நூறு கிலோ கிறாம் குண்டுகள்செய்யப்படுகின்றன. வவுனியா விமானப் படைத்தளத்தில் விமானம் ஒன்றிற்கருகில் பீப்பாய்க்குண்டுஇருப்பதைக் காண்பிக்கும் படம் ஒன்று எம்மிடமுள்ளது.

ப; அப்படியான குண்டுகளை நாம் உபயோகிப்பதில்லை

கே; குண்டுகள் ரத்மலானை, கட்டுநாயக்கா, அனுராதபுரம் விமானப்படைமுகாம்களில் செய்யப்படுகின்றனவா?

ப: விளக்கம் கூற நான் விரும்பவில்லை. அந்த ரகக் குண்டுகளை நாம் தயாரிப்பதில்லை.

கே; ஜூன் ஐந்து பெரு வெள்ளத்தின் போது முந்நூறு கிலோக் குண்டுகள் நீரில் மூழ்கின இவை ஆபத்தானதால் தேடி அகற்றப்பட வேண்டும்.

ப; இதில் உண்மையில்லை. இந்த ரகக் குண்டுகளை பாவிப்பதில்லை என்பதை நான் உங்களுக்குக் கூறியுள்ளேன்.

கே; சீனன் குடா வெடி விபத்துச் சம்பவத்தின் போது எத்தனை கிலோ வெடி மருந்துகள் அங்கிருந்தன?

ப; இக்கேள்விக்கு வியாக்கியானம் தர நான் விரும்பவில்லை.

கே; ஐயாயிரம் கிலோ வெடி மருந்து?

ப; எனக்கு அது பற்றித்தெரியாது?

கே: பீப்பாய்க்குண்டுகள் இன்றும் ரத்மலானையில் தயாரிக்கப்படுகின்றனவா?

ப: அந்தக் குண்டுகளைச் செய்வதுமில்லை; பாவிப்பதுமில்லை.

கே: விமானப்படை எதிரியின் இலக்குகளைக் குறி வைத்துத் தாக்கப்பாவிக்கப்படும் குண்டுகள் எந்த ரகத்தைச் சேர்ந்தவை?

ப: பாதுகாப்புக் காரணங்களுக்காக இதற்கான விளக்கத்தை என்னால் தரமுடியாது.

கே: நீங்கள் போடும் குண்டுகள் பற்றிப் புலிகளுக்குத் தெரியும்.

ப - கேர்ணல் முனசிங்கா: நாம் இலக்குகளைத் தாக்குகிறோம். அதில் பாவிக்கும் குண்டுகள், ஆயுதங்கள் பற்றி வெளியில் சொல்ல முடியாது.

கே: நம்பகத் தன்மை தான் பிரச்சினை. பீப்பாய்க் குண்டுகளின் பாவனையை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். குண்டுகள் போடப்படுவதையும் நாம் கண்டுள்ளோம். பீப்பாய்க் குண்டுகள் பாவிக்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்த காரியம். அதனை மறுப்பதில் என்ன தங்கியுள்ளது?

ப-ஜெயலத் வீரக்கொடி: அந்த வகைக் குண்டுகள் எம்மிடமில்லை.

கே: நீங்கள் 'விளக்கம் தர முடியாது என்று கூறுவது வேறு. ஆனால் நீங்கள் மறுப்பதேன்?

ப: பீப்பாய்க் குண்டுகள் உபயோகிக்கப்படுவதில்லை.

கே: நீங்கள் கூறுவது பொய்?

ப; இல்லை.

கே: பீப்பாய்க் குண்டுகளை உங்கள் தயாரிப்பிலான வெடிமருந்து உபகரணங்கள் என்று நாம் அழைக்கலாம். நீங்கள் இதனை ஒத்துக்கொள்கிறீர்கள்.

ப-கேர்ணல்முனசிங்கா: இல்லை நாங்கள் முறைப்படியான (மரபு முறை) முறைகளைக்கையாளுகிறோம். இதற்கு மேலாக எதையும் செய்தால் அது பாதுகாப்புப் படையினரின் உயிருக்கு ஆபத்தாக முடியும். இராணுவம் நிலைகொண்டிருக்கும் இடத்திலிருந்து 200 - 300 மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்திலுள்ள எதிரியின் இலக்குகளையும் விமானப் படை தாக்குகிறது. வெடி மருந்து உபகரணங்கள் என்பதே ஆபத்தான சொல். இந்த வகைக் குண்டுகளால் விபத்துச் சம்பவிக்கலாம்.

கே; எங்கள் எல்லோருக்கும் தெரிந்தஒன்றை நீங்கள் தெளிவாக மறுக்கிறீர்கள். இதை எல்லாம் நாம் எப்படி நம்புவது. ஒரு வேளை விமானப் படையில் மந்திரவாதிகள் இருக்கிறார்களாக்கும். பீப்பாய்க் குண்டுகளை நாம் பார்த்திருக்கிறோம். அந்தக் குண்டுகளில் நேபாம் நிரப்பப் படுவதால் உங்களால் மறுக்கப்படுகிறது.

ப ஜெயலத் வீரக்கொடி; எம்மிடம் நேபாம் கிடையாது. அதற்கான தகுதியும் எம்மிடமில்லை.

கே: அடுத்து 'எம்மிடம் குண்டுமில்லை விமானமுமில்லை' என்று நீங்கள் சொல்லக் கூடும். வை-8 விமான விபத்து எவ்வாறு நிகழ்ந்தது?

ப: இது பற்றிய சரியானதொரு முடிவுக்கு இது வரை வரமுடியவில்லை.

கே: சீனன்குடா வெடி குண்டுச் சம்பவம் பற்றிய அறிக்கை எங்கே?

ப: அது தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதை எல்லோருக்கும் கொடுக்க முடியாது. அதில் ஓரளவு இரகசியத் தன்மையும் உள்ளது.

கே: வை- 8 விமான விபத்துப் பற்றி என்ன கூறமுடியும்?

ப: விசார்ணைக்குழு அதன் விசாரணையை முடித்ததும் அறிக்கை சமர்பிக்கப்படும். இந்த விபத்தில் நடுவானில்வெடிவிபத்துச் சம்பவிக்கவில்லை. சேதமடைந்த விமானத்தின் சில பகுதிகளைக் கண்டெடுத்துள்ளோம். முன்பு கிடைத்த அறிக்கையின்படி விமானத்தின் இறக்கையில் துண்டுகள் வெடித்ததாக அறிந்தோம். இறக்கைகள் அப்படியே எமக்குக் கிடைத்தன. விமானத்தில் வால் பகுதி எமக்குக் கிடைத்கவில்லை. வால் பகுதி உடைந்து சிதறியதாகக் கண்டவர்கள் கூறுகிறார்கள். இந்த விபத்துஎப்படி ஏற்பட்டது என்பதை எம்மால் நிரூபிக்க முடியவில்லை.

கே: விமானம் எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பதனை இறுதியாக நிராகரிக்கமுடியுமா?

ப: நூற்றுக் நூறு வீதம் என்னால் அதனை நிராகரிக்க முடியாது. ஆனால் எதிரிகள் விமானத்தைத் தாக்கவில்லை.

ப - கேர்ணல் முனசிங்கா: சுற்று வட்டாரத்தில் மற்றுமொரு விமானம் பறந்து கொண்டிருந்தது. நிலத்திலிருந்து விமானத்துக்குச் சுடப்படவில்லை. ஒரு சூடு சுட்டு விமானத்தை விழுத்த முடியாது. நூற்றுக் கணக்கான வேட்டுக்கள் தீர்த்தாக வேண்டும்.

கே: அப்படியானால் இயந்திரக் கோளாறு காரணமாக இருக்கலாமா?

ப - ஜெயலத் வீரக்கொடி: விபத்துக்கான சாட்சியங்களைப் படிக்காமல் என்னால் விளக்கம் கூற முடியாது.

கே: விமானத்தைத் தயாரித்தவர்களின் பிரதிபலிப்பு என்ன?

ப: அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். விசாரணை மேற்கொள்வதற்கான ஆதாரங்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

கே: எமது யாழ்ப்பாண விஜயம் எப்போது?

ப -கேர்ணல் முனசிங்கா: அதற்கான ஒழுங்குகள் செய்யப்படும்.

செய்தியாளர்: வை - 8 விமானத்தில் எம்மை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டாம்.

நன்றி: தி ஐலன்ட்

காலத்திற்குள் புலிகளை ஒழித்துக்கட்டி விடுவதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ண சூளுரைத்தார். ஆனால் அவர் வெற்றி பெறவில்லை. இந்நிலையில் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்தின் சார்பில் கேணல் முனசிங்கா இராணுவத் தலைமைக்கு அடித்த "ஹிண்டே" இதுவாகும்.

அதிகார கைமாற்றத்துடன் கடந்த மார்ச் மாதத்தில் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திற்கும், இராணுவத் தலைமைப் பீடத்திற்கும் இடையில் ஆரம்பித்த முரண்பாடானது தற்பொழுது பாராளுமன்றம் வரையும் சென்றுள்ளது. "கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகத்திற்கும் பாதுகாப்பு அமைச்சகத்திற்கும், படைத்தளபதிகளுக்கும் பிரச்சினையுள்ளதா? என சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

இம் முரண்பாடு கூட்டுப்படை நடவடிக்கை தலைமைப் பணியகம் தன்னிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டதில் இருந்து மேலும் தீவிரமாகியுள்ளது. இதேவேளை கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் இராணுவத் தலைமைப் பீடத்துடன் மட்டும் அல்ல சிறிலங்கா ஜனாதிபதி மீதான தமது அதிருப்தியை வெளிக் காட்டத் தொடங்கியுள்ளது. அண்மையில் புத்தளவில் நடைபெற்ற 'கம்முதாவ' கொண்டாட்டங்களில் இராணுவ வைத்தியர்களை அரசாங்கம் பயன்படுத்தியதாக தமது ஆட்சேபத்தை ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கடிதம் மூலம் திரு பிரேமதாசாவிற்கு தெரியப்படுத்தியுமுள்ளார்.

அதாவது, திடீரென வீங்கிப் பெருத்த சிறிலங்கா இராணுவத்திற்குள் அதிகாரப் போட்டி தீவிரமடைந்துள்ளது. தமிழரின் தேசிய இனப் போராட்டத்தை அடக்கவென இராணுவத்திற்கு தேவைக்கதிகமான அதிகாரங்களையும், வசதிகளையும் வழங்கிய சிறிலங்கா அரசாங்கம் இவ் முரண்பாட்டை இன்று கையாள முடியாதநிலையில் உள்ளது. இதேவேளை அரசியல் ரீதியாக அரசாங்கம் பலவீனப்பட்டுப் போயுள்ள இன்றைய நிலையில் இராணுவத்தினுள் ஏற்பட்ட இவ் முரண்பாடானது அரசாங்கத்திற்குமேலும் புதிய தொரு தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

# பாக். அணு ஆயுத நாடானால் உதவிகள் நிறுத்தப்படும்

## - ஜப்பான் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தன்னை அணு ஆயுதம் வைத்திருக்கும் நாடாக அறிவிக்குமேயானால் அதற்கான எல்லா விதமான ஜப்பானிய உதவிகளும் உடனடியாக நிறுத்தப்படும் என்று ஜப்பான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பிரபல ஆங்கில நாளேடு ஒன்றில் வெளியாகியுள்ள அறிக்கையொன்று நாட்டின் நடப்பாண்டிற்கான பாதுகாப்புத்துறை செலவுகளில் இஸ்லாமாபாத்தின் 15.8 சதவிகித அதிகரிப்புப் பற்றிய தனது கவலையை ஜப்பான் அதிகார பூர்வமாக தெரிவித்திருப்பதாக கூறுகிறது.

இத்தருணத்தில் ஜப்பானிய பொருளாதார உதவியின் எந்தவிதமான குறைப்பும் பாகிஸ்தானின் பொருளாதாரத்தில் மிகுந்த பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும் என்றும்.

ஜப்பான் ஒவ்வொரு ஆண்டும் நாற்பத்தைந்து கோடி டொலர் பெறுமதியான உதவியை பாகிஸ்தானுக்கு அளித்து வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதப் பிரச்சினை தொடர்பாக 1990ஆம் ஆண்டு ஒக்டோபரில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கான எல்லா உதவிகளையும் நிறுத்தி வைத்த பின்னர் பாகிஸ்தானுக்கு பெருமளவு உதவிகளை அளித்திடும் நாடு ஜப்பான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அணு ஆயுத மேற்பார்வை; ஈராக் - ஐ.நா உடன்பாடு

(நியூயோர்க்)

பாக்தாத்திலுள்ள விவசாய அமைச்சகத்திற்குள் ஐ. நா. ஆயுத மேற்பார்வையாளர்கள் செல்வது தொடர்பாக ஐ நா. வும் ஈராக்கும் உடன்பாடொன்றை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. சபையின் உலக அமைப்பின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

வளைகுடாவில், மற்றுமொரு போர் ஏற்படுவதற்கான அபாயத்தை இது முடிவுக்குக் கொண்டு வரும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ. நா. அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஈராக்கின் ஐ. நா. சிறப்புத் தூதுவர் பாக்தாத்திற்கு திரும்பிச் செல்வதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

இதேநேரம் ஈராக், ஐ. நா. உடன்பாடு குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் 'நான் மன நிறைவு அடைந்துள்ளேன்' என்றும் 'ஈராக்கிற்கு எதிராக மேற்கொண்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இப்போது அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்திய - சீன உறவுகள் புதிய கட்டம் எட்டியுள்ளது

## - சீனப்பிரதமர் லீ பெங்

(டில்லி)

இந்திய - சீன உறவுகள் புதியதொரு கட்டத்தை எட்டியிருப்பதாக சீனப் பிரதமர் லீ பெங் கூறியுள்ளார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவாருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் மேலும் அவர் குறிப்பிடுகையில் இந்திய - சீனத் தலைவர்கள் அடிக்கடி சந்தித்துப் பேசியதாலும் பயணங்களை மேற்கொண்டதாலும் இந்திய சீன உறவு புதிய கட்டத்தை எட்டியதாகவும், இந்தியாவிலும் சீனாவிலும் வாழும் மக்களின் தொகை உலகின் மொத்த சனத்தொகையில் நாற்பது சதவிகிதம் என்றும் இரு நாடுகளும் ஒத்துழைத்து உலக சமாதானத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வ மாகபங்களிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் பேசிய சரத் பவார் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவும் சீனாவும் உண்மையிலேயே அக்கறையுடைய யோசனைகளைத் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

# பேச்சுக்களை நடத்த ஏ. என். சி.க்கு அழைப்பு

(கேப்டவுண்)

தென்ஆபிரிக்காவில் இடைக்காலஅரசு ஒன்றை அமைக்கவும் அரசியல் சாசனம் ஒன்றை வரையவும் ஒருசட்டப் பேரவையைத் தேர்ந்தெடுக்க இனப்பாகுபாடற்ற தேர்தல் ஒன்று உடனடியாக நடத்த வேண்டும் என்று தென் ஆபிரிக்க ஜனாதிபதி டி, கிளார்க் கூறியுள்ளார்,

அமைச்சரவையின் இரண்டு நாள் கூட்டத்திற்குப் பின்னர் அவர் பிரிட்டோரியாவில் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

சென்ற மாதம் முறிவடைந்த அரசியல் சாசன பேச்சுவார்த்தைகளை மீண்டும் நடத்த வருமாறு ஆபிரிக்க தேசிய காங்கிரசிடம் அவர் மீண்டும் விண்ணப்பித்துக் கொண்டார்

## ஜப்பானில்

# மேல்சபைக்கான தேர்தலில் ஆளும்கட்சி பெருப் வெற்றி

ஜப்பானிய பாராளுமன்றத்தின் மேற்சபைக்கு நடந்த தேர்தலில் ஜப்பானின் ஆளும் கட்சியான லிபரல்கட்சி அறுபத்தெட்டு ஆசனங்களைப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து அரசியலைத் தூய்மைப்படுத்தப் போவதாகவும், அரசின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய பாடுபடப் போவதாகவும், ஜப்பானிய பிரதமர் நியாசாவா கூறியுள்ளார்.

மேல் சபையில் மொத்தமுள்ள இருநூற்றி ஐம்பத்து இரண்டில் நூற்றி இருபத்தேழு ஆசனங்களுக்கு தேர்தல் நடந்தது. இவற்றில் அறுபத்தெட்டு ஆசனங்களைப் பெற்றதன் மூலம் மேல் சபையில் ஆளும் கட்சி ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றுள்ளது.

இது அரசியல் சீர்திருத்தம் செய்யப் போவதாக கூறியிருக்கும் பிரதமருக்கு வசதி செய்துள்ளதாக அவதானிகள் கூறியுள்ளனர்,

# புதிய ஜனாதிபதி சென்னை விஜயம்

(சென்னை)

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா நேற்று தனி விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார். திருப்பதிக்கு செல்லும் வழியில் சென்னைக்கு வந்த அவருக்கு விமானநிலயத்தில் ஆளுநர், முதலமைச்சர் சபாநாயகர் உயர்நீதிமன்ற நீதிபதி வெளிநாட்டுப் பிரமுகர்கள், மற்றும் சட்டசபை உறுப்பினர்கள், உட்பட பலர் வரவேற்பு அளித்தனர்- வரவேற்புபசாரத்தைஏற்றுக்கொண்ட அவர் பின்னர் திருப்பதிக்கு கெலிகப்டரில் பயணமானார்.

ஈழநாதம்

# தோட்டதொழிலாளர் பக்குவம் சிங்களக் கட்சிகளிடம் இல்லை - சென்னன்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு இருக்கும் பக்குவம் கூட இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கத்திற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிடையாது என பதுளை மாவட்ட எம். பி. டி. வி. சென்னன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர் தொடர்ந்து கூறியதாவது;

இந் நாட்டில் பொதுப் பிரச்சினையான இன நெருக்கடியை தீர்த்து வைக்க இரு பெரும் கட்சிகளான ஐ.தே.க. வுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே ஐக்கியம் இல்லை. அவை ஒன்றை யொன்று மாறி மாறி குற்றஞ் சாட்டிக்கொண்டிருக்கின்றன.

தனியாரினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கும் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளை அவர்களுடன் சுமுகமாகப் பேசித் தீர்வு காணும் போக்கை கடைப்பிடிப்பதாக இல்லை. தொழிலாளர்களின் கோரிக்கைகளை பற்றி கவனிக்காமல் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதிலேயே அவை அக்கறையாக இருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் காலத்தில் இருந்ததைப் போல தொழிலாளர்களை அடிமைகளாக நடத்த இந்த புதிய நிர்வாகங்கள் ...ற்படுகின்றன என்றும் சென்னன் தனதுரையில் குறிப்பிட்டார்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04.05.73



உதிர்வு 28.07.91

### வீரவேங்கை ரேமன்
(குணேந்திரராசா ஜெயச்சந்திரன்)

மகனே திருமலையில் ஜனனித்தே
 தீரமுடன் களம் புகுந்தாய்
கங்கணம் கட்டி நிற்கும் சிங்கள அரசுதனை
 கதிகலங்கச்செய்வேன் என களம்நோக்கி புறப்பட்டாய்
சிறுவன் நானல்ல சிறுத்தை நான் பாருமென
 ஆனையிறவு தனில் ஆணையுடன் முன்சென்றாய்
களத்தில் நீ செல்கையிலே — தார்மீக
 அரசினது தர்மமற்ற குண்டினால் மரணத்தைத்
  தழுவினாய்

மகனே நீ மரணிக்க வில்லையடா உனது
 வீரச் சுவடுகளில் உன் தோழர்கள்
உறுதியுடன் தொடர்கின்றனர்.

தந்தை, தாய்
தங்கை, தம்பிமார்

(2907)

---

உலக... பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் வெலிக்கடையில் இப்படுகொலை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினர் உலங்கு வானூர்தியில் சிறைச்சாலையை சுற்றிக் கொண்டிருந்தனர். கூப்பிடு தொலை தூரத்தில் பாராளுமன்றம் உள்ளது. கிரிமினல்குற்றவாளிகளும் குண்டர்களும் சேர்ந்து 53 தமிழர்களைப்படுகொலை செய்தனர்.

இப்படுகொலைச் சம்பவத்தின்போது பல இயக்கங்களை சேர்ந்தவர்களும் இருந்தனர். பின்னர் மட்டக்களப்புச்சிறை உடைப்பின்போது தப்பிவந்தவர்கள் இன்று இந்தியாவிலும் கொழும்பிலும் வாழுகின்றனர் ஆனால் தம் கண் முன்னே நடந்த இப்படுகொலையை நினைவு கூர இவர்கள் இன்று வரை சிந்திக்காதது கவலைக்குரிய ஓர் விடயமாகும் என்றார்.

மேலும் கிளிநொச்சி மாவட்ட அர[illegible] பொறுப்பாளர் பிரசாந்த், வடமராட்சி அரசியல் நிர்வாக பொறுப்பாளர் அரசண்ணா, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த மாலினி, மூத்த உறுப்பினர் தேவர், பொன் பூலோகசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

செஞ்சிலுவை

செஞ்சிலுவைச் சங்கம் கொழும்பிற்கு அழைத்துச் சென்றிருந்தது இதே கப்பலில் கொழும்பு சென்ற யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் மேற்படி பாராளுமன்ற உறுப்...

---

# மாணவர் அடையாள அட்டை தபால்நிலையத்தில்பெறலாம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதம தபாலகத்திலும் உப - தபாலகங்களிலும் தபால்திணைக்கள மாணவர் அடையாள அட்டைகளை பெறவிண்ணப்பித்த மாணவர்களுக்கான தபால் திணைக்கள அடையாள அட்டைகளை பிரதி அஞ்சல் அதிபர் நாயக அலுவலகம் அனுப்பி வைத்துள்ளது. இவ் அடையாள அட்டைகளை பெற விண்ணப்பித்தவர்கள் தாம் விண்ணப்பித்த தபால்நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளுமாறு கரவெட்டி தபாலதிபர் அறிவித்துள்ளார். (25)

# நினைவாலய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஸ்தாபகர் அவர்களின் நினைவாலயத் திறப்பு விழா நாளை புதன்கிழமை(29-7-92) காலை 9-00 மணியளவில் அக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக க. அருணாசலமும் சிறப்பு விருந்தினராக மருதனாமடை பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு. சிவானந்தன் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பொது மக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

துப்பாக்கிச்சூடு

...யளவில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவக் காவலரணில் இருந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

யாழ்.கரையோரப் பகுதிகளான அலுப்பாந்தி,பண்ணை கொட்டடிப் பகுதிகளை இலக்கு வைத்தே வேட்டுகள் தீர்க்கப்பட்டன. (21)

முன்னாள்

திரு. உடுகம்பொல முடிந்தால் தன்னைப் பொலிசார் கைது செய்யட்டும் எனவும் சவால் விட்டிருந்தார்.

இதேவேளை தென்பகுதியில் ஆயிரக்கணக்கானவர்களின் மரணங்களுக்கு அரசுதான் காரணம் என்று பிரேமதாசா உடுகம்பொல மூன்று மாதங்களுக்கு முன்னர் முதன்முதலாக பிரேமதாசா அரசின் மீது குற்றம் சாட்டினார்-

1988, 1989இல் நடந்த தேர்தல்களில் எதிர்க்கட்சியினரும். சுதந்திரக் கட்சியினரும் ஆதரவாளர்களும் ஆயிரக்கணக்கில் அதிரடிப் படைகளால் கொல்லப்பட்டதாகவும் உடுகம்பொல தெரிவித்தார். கருப்புலிகள் என்ற குழுவினை அமைத்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொலைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

எண்பதுகளின் பிற்பகுதியில் நடந்த ஜே. வி. பி. கிளர்ச்சியின்போது இவரது அன்னை உட்படக் குடும்பத்தில் நான்கு பேர் சுட்டுக்கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உடுகம்பொல அவர் உறவினர் வாழும் அமெரிக்காவுக்கோ அல்லது கனடாவுக்கோ சென்றிருககலாம் என்று ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாயக மண்ணில்
26
|
02
|
1970



தாயக மீட்பில்
08
|
08
|
1991

---

# ஒலிம்பிக் போட்டிகள் - 1992

பார்ஸிலோனியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 25ஆவது ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளில் 12போட்டிகளுக்கான இறுதி முடிவுகள் வெளியாகியுள்ளன. இவற்றின்படி பதக்கங்களைப் பெற்றுக் கொண்ட நாடுகளின் விபரம் வருமாறு

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சுதந்திர குடியரசின் பொதுநல அமைப்பு | 04 | 01 | — |
| சீனா | 02 | 04 | — |
| அமெரிக்கா | 01 | 01 | 02 |
| பல்கேரியா | 01 | 01 | — |
| ஹங்கேரி | 01 | 01 | — |
| ஜேர்மனி | 01 | — | 02 |
| அவுஸ்ரேலியா | 01 | — | 01 |
| தென்கொரியா | 01 | — | — |
| பிரான்ஸ் | — | 02 | 01 |
| சுவீடன் | — | 01 | 01 |
| இத்தாலி | — | 01 | — |

ஸ்லோவாக்கியா, நெதர்லாந்து, பின்லாந்து, ருமேனியா, மங்கோலியா தலா ஒரு வெண்கலம்

# போறூட் உதவி

வடமராட்சிப் பகுதியில் உள்ள பத்து பாலர் பாடசாலைகளுக்கு வடமராட்சி போறூட் நிறுவனம் 30,000 ரூபா பெறுமதியான பாலர் கல்விவிளையாட்டுப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது. போறூட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இப்பாலர் கல்வி விளையாட்டுப் பொருள்கள் பாலர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வரப்பிரசாதமென இப்பாலர் பாடசாலைகளின் பொறுப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (25)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம்

கோண்டாவில் வடக்கு கந்தர் பொன்னுத்துரை (பிரபல புறோக்கர் பண்டா) யின் அன்பு மனைவி திருமதி பொன்னுத்துரை செல்வரத்தினம் அவர்கள் (27-07-92) நேற்று காலமாகிவிட்டார். இவர் சிறீகாந்தன் (பிள்ளையார் லொறி உரிமையாளர்), சிறீபாலன் (நிவேதா ரான்ஸ்போட் உரிமையாளர்), திருமதி அருளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவலோகநாதன் (லொறி உரிமையாளர்), திருமதி ஞானசோதி, திருமதி சூரியகலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், தனேஸ்குமார் (சுவிஸ்), தர்மினி, றஜீல்குமார், சிந்தியா, பிரதீபன், அனுசியா, பிரசாந்தன், கவிதா, சுனிதா, துசிதா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-07-92) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று கோண்டாவில் டிப்போ அருகாமையிலுள்ள கொட்டைக்காடு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
க. பொன்னுத்துரை (பண்டா)

[2909]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்: 05 - 04 - 1970

வீரச்சாவு: 28 - 06 - 1992

### கப்டன் வீரமணி

(கணேசபிள்ளை சந்திரசேகரம்)

அழியாச் சுடரானாய்

தாயக மீட்புப் போரிலே நல்ல
தலைவன் அணியிலே புலியானாய்!
பாயும் எதிரியைப் பாதையிலேந்திடும்
பணியில் சுழலும் புயலானாய்!

ஓய்வு அறியா வீரமணி நீ
உதிர்ந்தாய் ஆனால் விதையானாய்!
தேயா நிலவாய்! எங்கள் நெஞ்சில்
திகழ்வாய்! அழியாச் சுடரானாய்!

திருமலைத் தாய் ஈன்ற கண்மணி
தமிழ் ஈழம் மீட்டிட எழுந்த வேங்கை நீ
எரிமலையெனக் களத்திலாடினாய்
எங்கள் வீரமணியுனை நாங்களும்
ஈரவிழிகளால் அஞ்சலித்துமே
வீரமோடு உன் பணியைத் தொடர்கின்றோம்.

கொக்குவில்.

-நண்பர்கள்.

(-2903)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம்28 ஆம்திகதி அச்சிட்டு;வெளியிடப்பட்டது

பினரின் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரித்தார்.

புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோய்களால் பாதிக்கப்பட்ட பெரும்பாலும் வயது முதிர்ந்தோரே கொழும்பு வந்துள்ளனர். மேலும் கப்பலில் வந்தோருள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும், சுகாதார மற்றும்அரசதிணைக்கள பிரதிநிதிகளும் நோயாளர்களின் உறவினர்களும் அடங்குவர் என அரச அதியர் குறிப்பிட்டார்.

### புலிகளுக்காக

1982 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பண நெருக்கடி இருந்த காலத்தில் தம்மிடமிருந்த பணத்தை எமக்காகக் கொடுத்து உதவியவர் கவிஞர் காசி ஆனந்தன். அவர் விடுதலைக் கவிகளைப் பாடும் ஒரு கவிஞராக மட்டும் இல்லாமல் விடுதலை இயக்கத்துக்கு உதவும் ஒரு கவிஞராக ஒரு விடுதலைப் போராளியாகத் தம்மை முழுமையாக இணைத்துக்கொண்டவர் என தெரிவித்தார்.

இவ்விழாவில் விமரிசன உரைநிகழ்த்திய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத் தலைவர் திரு புதுவை இரத்தினதுரை அவர்கள் உரையாற்றுகையில்.

தமிழீழம் இருவரைப் பெற்றெடுத்தமைக்காகப் பெருமைப்பட முடியும் ஒருவர் தலைவர் பிரபாகரன் மற்றவர் கவிஞர் காசி ஆனந்தன். அறுபதுகளிலேயே தமிழன் வாழவேண்டும் என்றால் தமிழர் படை நடத்த வேண்டும் என்று தீர்க்க தரிசனத்தோடு எடுத்துரைத்தவர் கவிஞர் காசி ஆனந்தன் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் தலைமைதாங்கினார். நூலின் விமரிசன உரைகளைப் பண்டிதர் வீ.பரந்தாமன், திரு.குழந்தைவேல் ஆகியோரும் நிகழ்த்தினர்.



## லெப்ரினன்ட் - வரன்

[கந்தர் தர்மகுலசிங்கம்]

திதி:- 28 . 07 . 92


உவப்புமிகு உருத்திரபுரத்தில் உதித்த வரனே
உன்இளமை எதிர்கால இன்பவாழ்வு, சகோதர
பாசங்களை விட்டு
எம்மண்ணின் விடிவிற்காய் ஏந்தினாயே துப்பாக்கி
களம்பல கண்டாய் வெற்றிபல கொண்டாய்
கட்டைக் காட்டினிலே வீழ்ந்தது உன்னுடல் மட்டும்தான்
உன்சாம்பல் மட்டும்தான் காற்றோடு கலந்தது
உன்நினைவுகள் ஆறாதகாயமாய் ஆழமாய் பதிந்தது
அந்நினைவு எம்மண்ணிற்கு ஏற்றிய தீபமே

உருத்திரபுரம்,
கிளிநொச்சி.
[2906]

இங்ஙனம்
தந்தை, சகோதரர்கள்,
உறவினர்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்: 05 — 04 — 1970



வீரச்சாவு: 28 — 06 — 1992

### கப்டன் வீரமணி

(கணேசபிள்ளை சந்திரசேகரம்)


மறக்கவொண்ணா மறவேங்கை!

எல்லை தனைத் தாண்டி வந்த ஈனர் கூட்டம்
எங்கள் தமிழ் ஈழமண்ணை மிதிக்கவிட்டால்
இல்லையடா மான(ம்), எங்கள் வீரத்திற்கே!
இழுக்காகும் என்றார்த்துக் களத்தை நோக்கிப்
பல்லை நெறு நெறுத்தபடி பாய்ந்து சென்று
பகைவர் தமைப் பதறடித்து, வெற்றி தன்னைச்
சொல்லுகின்ற பதக்கமென மார்பில் குண்டு
துளைபோட, அதைத் தாங்கித் தரணி மெச்ச
மா வீரனாய் மண்ணில் சாய்ந்த வீர
மறவேங்கை, ''வீரமணி'' மறவோம் உன்னை!

- நண்பர்கள்

(சி / 4783)

மண்ணில் உதித்தது 04.01.72



மண்ணில் மடிந்தது 08.08.91

## வீரவேங்கை ஆனந்தன்

(தங்கரத்தினம் ரவிச்சந்திரன்)

திதி: 28.07.92

என் அன்புமகனே ஓர் ஆண்டு சென்றுவிட்டதா? இல்லை
என் கண்மணியே உன்னை மார்மீதும் தோள்மீதும்
சுமந்த என் நெஞ்சு ஆறாத்துயர் கொள்ளுதடா
எமக்குக் கடன் செய்வதிலும் — பெற்ற தாயினும்
மேலாக இம்மண்ணை எண்ணி எம்மை விட்டுப்
பிரிந்த என் செல்வமே! உன்னை எண்ணிப்
பெற்றவள் வாடுகிறாள் உடன்பிறந்தவர்கள்
உன் வரவைத் தேடுகிறார் மகனே நீ எங்களுக்காக
மடியவில்லையடா! இம்மண்ணை மீட்பதற்காய் மடிந்தாய்

உன் பிரிவால் துயருறும்

பெற்றார், சகோதரர்,
உறவினர்கள்.

(2908)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

27-07-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5031

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
28-5862, 26-1341, 41-9663, 42-2397, 26-5870, 43-1019, 42-9345, 42-4126, 42-3114, 41-8875, 26-5777, 27-8999, 26-4058, 24-9938, 42-7975, 42-8292, 26-6566, 28-0940, 24-422, 26-5112, 26-1728, 28-2657, 40-1188, 24-4491, 22-8335, 27-6259, 26-3130, 26-1376, 27-9707, 25-3948, 25-5741, 25-1296, 25-1666, 25-3654

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்தவாகன இலக்கங்கள்:-
41-9855, 26-4990, 40-2677, 41-9457, 26-0524, 27-1187, 26-7546, 24-5939, 27-8515, 40-2043, 24-6699, 27-7740, 27-5099, 26-8419